மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறை

## Kabila's psychological approach in Kurunthokai

நா. காணிக்கராஜு[1] / N. Kanikkaraju[1]
[1] Assistant Professor, Chennai Cristian College
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் குருந்தொகைப் பாடல்களில் காணக்கிடக்கும் கபிலரின் உளத்தியல் அணுகுமுறைகளை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, குருந்தொகைப் பாடல்களில் காணப்படும் கபிலரின் உளத்தியல் அணுகுமுறைகளை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு குருந்தொகைப் பாடல்களில் காணப்படும் கபிலரின் உளத்தியல் அணுகுமுறைகளை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** குறுந்தொகை, கபிலர், உளத்தியல், அணுகுமுறை

**Abstract**

The major objective of the research is to explore the Kabila's psychological approach in the Kurunthokai. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the Kabila's psychological approach in the Kurunthokai. The research claims to be the first such attempt to do a study regarding the Kabila's psychological approach in the Kurunthokai.

**Keywords:** Kurunthokai, Kabilar, Psychological, approach

**முன்னுரை**

பண்டைய காலம் முதல் இன்றைய காலம் வரையில் படைக்கப்படும் இலக்கிய வடிவங்கள் அனைத்தும் சமுகத்தை மையப்படுத்தியே படைக்கப்படுகின்றன. அவை, மனித இனம் மாண்படையும் நோக்கத்தை முதன்மைப் படுத்துவதாகவே அமைகின்றன. இலக்கியப் படைப்பொன்றை உருவாக்கும் படைப்பாளனும் தன்னுடைய படைப்புகளில் சமுக அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் படைக்கப்பட்ட படைப்பின் ஊடாகத் தங்களின் உணர்வுகளோடு பொறுத்தமுறத் தொடர்புபடுத்தும் வகையில் படைக்கப்படுகிறது. இந்தப் படைப்புகளான இலக்கியப் பனுவல்கள் அனைத்தின் வழியாக நல்லதொரு சமூகத்தைப் படைக்க முயல்கிறான். அவன், தான் சார்ந்து வாழும் சமுகத்தவரைப் போற்றி, பாதுகாக்கும் கடப்பாடு கொண்டவர்களாகத் திகழ வேண்டுமென்ற நோக்கத்தோடு படைப்பிலக்கியம் உருவாக்கப்படுகின்றது.

அவ்வகையில், சங்க இலக்கியத்தைப் பாட்டும் தொகையும் என்றும் பதினெண்மேற்கணக்கு என்றும் அழைக்கப்படுகின்றது. சங்க இலக்கியம் 2381 பாடல்களைக்கொண்டது. எட்டுத்தொகை நூல்களில் ஐந்து அகநூல்களும், இரண்டு புறநூல்களும், அகப்புறநூல் ஒன்றும் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவைகளில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை ஆகியவை அன்பின் ஐந்திணையை மையப்படுத்திப் பாடப்பட்ட அகவுணர்வுகளின் தொகுப்பாக அமைந்துள்ளன. இவ்வைந்து நூல்களில் நல்ல என்னும் அடையோடு உள்ள அகநூல் குறுந்தொகையே ஆகும். இந்நூலின் பாடல்களைப் பல்வேறு உரையாசிரியர்கள் கையாண்டுள்ளனர். குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறை என்னும் தலைப்பில் இக்கட்டுரை அமைகிறது. குறிஞ்சிக் கபிலர் என்றழைக்கப்படும் புலவர் உளத்தியல் அணுகுமுறையின் ஊடாக இலக்கியப்படைப்பை எடுத்துரை உத்தியின் வழியாகப் பயன்படுத்தியுள்ள பாங்கினை ஆராயும் நோக்கத்தில் இக்கட்டுரைக் கொண்டுள்ளது.

இதற்கு அரண்சேர்க்கும் நோக்கில் உளத்தியலுக்கான விளக்கம் குறித்து மேனாட்டு அறிஞர்களின் விளக்கமும் இடம்பெறுகின்றது. அத்துடன் உளத்தியல் அணுகுமுறை குறித்த ஆய்வறிஞர்களின் விளக்கங்களும் இங்கு அமைந்துள்ளன. இவ்விளக்கங்களும் அணுகுமுறையும் குறுந்தொகையில் பாடப்பட்டுள்ள இருபத்தெட்டுப் பாடல்களும் உளத்தியல் அணுகுமுறையுடன் பொருந்துமாற்றை இக்கட்டுரையில் ஆராயப்படவுள்ளது.

**உளத்தியல் விளக்கம்**

ஒரு மனிதனின் ஒட்டுமொத்தமான செயல்கள், உணர்ச்சிகளின் வழியாக, தான் வாழும் சமுகத்தில் வெளிப்படுத்தே உளத்தியல் என்பர். இன்றைய காலச்சூழலில் மனிதன் பிறரைவிடத் தன்னையே மேலானவனாக வெளிப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறான். அவ்வாறு வெளிப்படுத்தும் முதன்மையான பணிகளில் குறிப்பாக கல்வி, குடும்பம், தொழில் போன்ற காரணிகளால் தனக்குப் பாதிப்பு ஏற்படுவதை அறிந்துகொள்கிறான். இந்தப் பாதிப்புகளால் மனமும் உடலும் உளத்தியல் ரீதியான பாதிப்புக்கு ஆட்படுகிறான். இப்பாதிப்பு அவனது ஒட்டுமொத்தமான வளர்ச்சியையும்

தடைசெய்கிறது. இதற்குத் தடையாக உள்ள உளத்தியலை அணுகும் நுட்பத்தை மனிதன் நன்கு புரிந்துகொள்ளாததே முக்கியமான காரணமாகும். மனிதன் வாழ்க்கையில் உறுதியாக வெற்றியைக் காண முடியும். நாம் வாழும் உலகில் எவ்வகையாகச் செயலாற்றவேண்டும் என்னும் சிந்தனை ஊற்றுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் போது வெற்றிபெறுவது உறுதி. உளத்தியல் என்பதை ஆங்கிலத்தில் சைக்காலஜி (psychology) என்றழைக்கின்றனர். சைக்கி, லோகஸ் எனும் கிரைக்கச் சொற்களும் இணைந்து சைக்காலஜி என்று அழைக்கப்படுகிறது.

உளத்தியல் என்பது 'மனிதனுடைய வெளிப்படையான செயற்பாடு மட்டுமல்லாது, அவனுடைய சிந்தனை வளம், உணர்ச்சி வயப்படும் பாங்கு, மகிழ்ச்சி, அச்சம் அல்லது துணிச்சல் போன்ற உணர்வுகள் அனைத்தைப் பற்றியும் ஒட்டு மொத்தமாக ஆய்வதே மனோதத்துவம் அல்லது உளத்தியல்' என்பர். உளத்தியல் குறித்த விளக்கம் மேற்கூறப்பட்ட விளக்கங்களுக்கு அடுத்து 'ஆன்மா' அல்லது ஆவியின் இயல்புகளை ஆராய்வதே என்ற கருத்தும் பரவலாகக் குறிப்பிடப்பட்டு வந்தது. இக்கருத்துகள் பற்றிய ஆய்வே உளத்தியல் என்று அறிஞர்கள் குறிப்பிட்டனர். இவ்வாறு குறிப்பிட்ட சூழிலில் சமுக ஆர்வலர்களிடையே பல்வேறு எதிர்ப்புகள் எழுந்தன. பிறகு, மனிதனுடைய மனம் அல்லது மனித உள்ளத்தை ஆராய்வதே உளத்தியல் என்று சொல் மாற்றம் பெற்றது. உளத்தியல் என்ற சொல்லிற்குக் க்ரியாவின் அகராதி பின்வரும் விளக்கம் தருகிறது. 'மனிதத் தனச்செயல்பாடுகள் குறித்து வெளிப்படும் குணம், நடத்தை ஆகியவைகளை ஆராயும் அறிவியல் துறை உளத்தியல்' என்று குறிப்பிடுகிறது. உளத்தியல் துறை பல்வேறு படிநிலைகளைக் கடந்து இலக்கியத்துறையின் வளர்ச்சியில் ஒப்பீடு மேற்கொள்ளும் ஆய்விற்கு வழிவகைகளை வகுத்துள்ளது என்பர்.

சங்க இலக்கியத்தோடு உளத்தியல் துறையை ஒப்புமைப்படுத்தும் ஆய்வுகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சங்க இலக்கியம் தொடக்க காலத்தில் பாட்டும் தொகையும் என்று அழைக்கபட்ட மரபைக்கொண்டது. ஆனால், சங்க இலக்கியத்தைப் பற்றி தமிழண்ணல் கூறும்போது, 'சங்க இலக்கியத்திற்குப் பிறிதொரு பெயர் சூட்டுக என்று கேட்டால் தயங்காமல் 'உளத்தியல் இலக்கியம்' எனக் குறிப்பிடலாம். அகத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு நூறும், புறத்திணைப்பாடல்கள் நூற்றுக்கு எழுபத்தைந்தும், 'உளத்தியல்' பற்றியனவே" என்றுரைக்கிறார்.

ஆகவே, தமிழின் பெருமையையும் தமிழரின் அகத்திணை வாழ்க்கை அகவுணர்வுகளை முதன்மையாகக் கொண்ட களவு, கற்பு வாழ்க்கையும், புறம் என்ற வகைப்பாட்டில் உள்ள கொடை முதலான மற்றவர்கள் தெரிந்துகொள்ளக் கூடிய வாழ்க்கையையும் இன்றும் பிரதிபலிக்கும் சங்க இலக்கியம் உளத்தியல் இலக்கியம் என்று துணிந்துரைக்கலாம். 'தமிழ்க் கவிதையில் அகப்புறப் பாகுபாடுகள் உளத்தியல் அடிப்படை கொண்டவை. அகமென்பது உள்ளத்தின்கண் நிகழ்வது, புறத்தே தோன்றாது. உணர்வு அறிவது அகத்தே பூத்து மலரும் தன்மையதாகிய காதல் உணர்வை அகம் என்றனர். தமிழ்ச்சான்றோர்கள் புறமென்பது வெளியே புலனாகும் நிலைகள் தொல்காப்பியர் கூறும் ஐந்திணை மரபும் அம்மரபின் வழிப்பட்ட சங்கச் சான்றோர் செய்யுட்களும் ஆழ்ந்த உளத்தியல் அடிப்படை கொண்டவை. இவற்றில் சமுதாய யதார்த்தத்தினும் உளத்தியல் யதார்த்தமே (Psychologyrealism) முன்னுரிமை பெறுகின்றது' இக்கருத்துகளை நோக்குமிடத்துச் சங்க இலக்கியம் உளத்தியல் இலக்கியம் என்னும் முடிவுக்கு வரலாம்.

### குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறை

சங்க இலக்கியப்பாடல்களில் மனித மனங்களின் பண்புநலன்களாலும் உணர்வுகளாலும் இணைத்துப் பின்னப்பட்ட இலக்கியமாகும். சங்க இலக்கியத்தை ஆய்வு செய்த அறிஞர்களின் கூற்றுகளின் வழியாக உளத்தியல் இலக்கியம் என்று கூறலாம். இவ்விலக்கியத்தை அணுகுமுறை வகைகளில் உளத்தியல் அணுகுமுறையும் (Psychological Approach) ஒருவகையைச் சார்ந்தது. சங்கப் பாடல்கள் அனைத்தும் மனித மனங்களின் ஒட்டுமொத்தமான உணர்வுகளின் வெளிப்பாடுகளையும் முதன்மையாகக் கொண்டவை. ஆதலால் இக்கருத்துகளின் வழியாகக் குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறையை இங்கு ஆராயலாம். ஐந்திணைப் பாடல்களில் குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடுவதில் புலமைப்பெற்றவர் கபிலர்.

இவர் குறுந்தொகையில் இருபத்தெட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். தலைவன் கூற்றாக ஐந்து பாடல்களையும், தலைவி கூற்றாகப் பதினைந்து பாடல்களையும், தோழி கூற்றாக ஐந்து பாடல்களையும் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் குறிஞ்சி நிலமக்களின் காதல் ஒழுகலாறுகளை எடுத்துரைப்பதாக உள்ளன. இப்பாடல்களில் உளத்தியல் அணுகுமுறையில் அமைந்துள்ள பாங்கினை இங்கு விளக்க முயலுகிறது .

### தலைவன் கூற்றுப் பாடல்களில் உளத்தியல் அணுகுமுறை

குறுந்தொகையில் இடம்பெறும் தலைவன் கூற்றுப் பாடல்கள் தலைவனின் எண்ணங்களின் வெளிப்பாட்டை முழுவதுமாக எடுத்தியம்பும் வகையில் கபிலர் படைத்துள்ளார். தலைவனின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் முறையில் பாடல்களை உளத்தியல் அணுகுமுறையில் படைத்துள்ளார்.

தலைவன் கூற்று ஐந்து பாடல்கள் உள்ளன. அகவுணர்வுகளை எடுத்துரைக்கும் மாந்தர்களில் முதன்மையானவர்கள் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலித்தாய், நற்றாய் போன்றவர்கள். தலைவன் தலைவியின் களவு வாழ்வு கற்பு வாழ்க்கையாக மலர்வதற்கு உறுதுணையாய் இருப்பவர்கள் பலர். அவர்களில் தலைவனுக்கு நெருங்கிய நண்பனாக விளங்கும் பாங்கன் திகழ்வான். தலைவன், தலைவி சந்தித்த பிறகு, அதைத் தனக்கு இனமான பாங்கனுடன் பகிர்ந்துகொள்கிறான். இக்கருத்தைக் குறிப்பிடுமிடத்து,

மால்வரை இழிதரும் தூவெள் அருவி
கல்முகைத் ததும்பும் பல்மலர்ச் சாரல்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீர்ஓ ரன்ன சாயல்
தீ ஓரன்ன என் உரன்அவித் தன்றே. (குறுந். 95)

என்னும் உளத்தியல் நுட்பத்தை வெளிப்படுத்தும் பாடலின் வழி குறிப்பிடுகிறான். இப்பாடலில் தலைவன், தான் விரும்பும் தலைவி இனியசாயலை உடையவள் என்று கூறுகின்றான். அவளின் அச்சாயல் தன்னுடைய நெருப்புப் போன்ற மனவலிமையை இழக்கச் செய்துவிட்டதாகப் பாங்கனிடம் எடுத்துரைக்கிறான். நீர், தீயை அழித்துவிடுவதைப் போல்

தலைவனின் வலிமையைத் தலைவியின் மென்மையினால் வென்றுவிட்டதாகக் குறிப்பிடுகிறான்.

**தலைவன் அல்லகுறிப்பட்டதை பாங்கனிடம் கூறுதல்**

தலைவன், தோழி தலைவியைச் சந்திக்க வரச்சொல்லிய இடத்திற்குச் செல்கிறான். அவ்விடத்தில் அவளைப் பார்க்க இயலாத வருத்தத்தைப் பாங்கனிடம் விளக்குகிறான். இச்சூழலை உளத்தியல் நோக்குடன் கூறுகிறான். இப்பாடலில் கொல்லிமலையைக் குடைந்து உருவாக்கப்பட்ட வல்வில் ஓரியின் கொல்லிப்பாவைப் போன்றவள். அவள் இளமையும் அழகும் வாழ்ந்தவள். அவள் தோள்களைத் தழுவிக் கூடுவதற்கும் அரிதாய் இருந்தது என்கிறான். இக்கருத்தை விளக்குமிடத்து,

............ வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்திற்கு அரிய பணைப்பெருந் தோளே. (குறுந். 100)

என்ற பாடல் வரிகளின் மூலம் ஆசிரியர் விளக்குகிறார்.

மற்றொரு பாடலில், தலைவியைத் தினைப்புனத்தைக் காத்துக்கொண்டிருக்கிறாள். அவள் தினைப்புனத்திற்கு வரும் கிளிகளை விரட்ட குளிர் என்னும் கருவியைப் பயன்படுத்துகிறாள். குளிர் கருவியின் இனிய இசை கிளிகளை விரட்டுவதற்குப் பதிலாக, அக்கிளிகளை அழைப்பதாக நினைத்துக்கொள்கிறது. இசையில் மயங்கி தினைப்புனத்திலேயே இருக்கின்றது. அதைப் பார்த்தத் தலைவி அழுகிறாள். அக்காட்சி மலைச்சாரிலில் ஆழமான சுனையில் பூக்கும் குவளை மலர்களில் மழைத்துளிகள் படும்போது தலைவியின் கண்களில் இருந்து வடியும் கண்ணீர் வெளிப்பட கலங்கினாள். இக்காட்சியைத் தலைவன் பாங்கனிடம் கூறுவதாக உவமைநயத்துடன் உளத்தியல் கருத்துகளைக் கபிலர் படைத்துள்ளார். இதைப் பின்வரும் பாடல் விளக்குமிடத்து,

சுடுபுனல் மருங்கில் கலித்த ஏனல்
படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
இசையின் இசையா இன்பா ணித்தே!
கிளி அவள் விளியென எழல்ஒல் லாவே
அது புலந்து அழுத கண்ணே, சாரல்
குண்டுநீர்ப்பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலைஇத்
தண்துளிக்கு ஏற்ற மலர்போன் றனவே. (குறுந். 291)

இப்பாடலில் தலைவியின் மென்மையைக் குவளை மலரோடு ஒப்புமைப்படுத்தி உவமை நயத்துடன் கவிஞர் விளக்குகிறார்.

**தலைவன் வருத்தத்துடன் உளத்தியல் சிக்கலைக் கூறுதல்**

தலைவன் இயற்கைப் புணர்ச்சியில் தலைவியை சந்தித்து வீடு திரும்புகிறான். அவளைப் பார்த்த நினைவிலேயே பெருமூச்சு விட்டவனாகத் திரும்புகிறான். அவனது மனவருத்தத்தை

உளத்தியல் பாங்குடன் ஆசிரியர் படைத்துள்ளார். தலைவனின் அந்நிலைப்பாடு நள்ளிரவில் படுத்திருக்கும் யானை பெருமூச்சுவிட்டது போன்று நான் வருத்துகின்றான். இதைக் காட்சிப்படுத்தும் போது,

........................ பானாள்
பள்ளி யானையின் உயிர்த்து, என்
உள்ளம் பின்னும் தன்உழை யதுவே. (குறுந். 142)

என்பது பாடல் அடிகளாகும்.

மற்றொருப் பாடலில், தலைவனும் தலைவியும் களவில் ஈடுபடுகின்றனர். தலைவி, தன் காதலரைக் கற்பு வாழ்க்கையில் இணையும் வரையில் பிறர் அறியாதவாறு போற்றிப் பாதுகாக்கும் அகவொழுக்கத்தின் உளத்தியல் நுட்பத்தை விளக்குவதாகப் பாடல் இடம்பெற்றுள்ளது. இப்பாடல் பின்வருமாறு,

இரண்டு அறி கள்விநம் காத லோளே
முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்
மூள்ளூர்க் கானம் நாற வந்து
நள்ளென் கங்குல் நம் ஓரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமர் ஓரன்னள் வைகறை யானே. (குறுந். 312)

எனும் பாடலாகும். இங்கு தலைவிக்கும் தலைவனுக்கும் உள்ள அகவொழுக்கம் ஊரார் அறியாதவறு மறைந்தொழுகும் தன்மையை விளக்கும் பாடலின் ஆழத்தை எடுத்துரைக்கின்றது.

### தலைவி கூற்றுப் பாடல்களில் வெளிப்படும் உளத்தியல் அணுகுமுறை

தலைவியின் கூற்றாகக் குறுந்தொகைப் பாடல்களில் பதினாறு பாடல்களை ஆசிரியர் பாடியுள்ளார். இப்பாடல்கள் தலைவன் தலைவியின் அகவொழுக்கத்தின் நெறிக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. இவை அனைத்தும் உளத்தியல் அணுகுமுறையை நுட்பமாக எடுத்துரைக்கின்றன.

### தலைவனுக்காக தலைவி ஆற்றியிருத்தல்

தலைவி தலைவன் மீது கொண்ட காதலால் மன உறுதியுடன் அவன் வருகைக்காகக் காத்திருக்கிறாள். இவளது மனவுறுதிப்பாட்டை விளக்குவன இருபாடல்கள் உள்ளன. தோழி தலைவனின் மலையில் மாலைபெய்த மழையில் ஆற்றில் அடித்து வந்த காந்தள் மணம் கமழும். அவ்வாறு வெள்ளப்பெருக்கெடுத்து வந்த நீரில் நம்மூர் ஆற்றங்கரையில் காந்தள் கொடி வந்துசேர்ந்தது. அதை தழுவி வந்து நம் வீட்டுத்தோட்டத்தில் நட்டு வளர்த்துவந்தேன். அந்தக் காந்தள் செடியைப் பாரத்த நம் அன்னை என்னிடம் கோபத்தை

வெளிப்படுத்தவில்லை. அந்தச் செயலுக்காக நம் அன்னைக்குக் கைமாறாகத் தேவலோகத்தையே பரிசாகக் கொடுத்தாலும் அது சிறிதாகும் என்கிறாள். அந்தக் காந்தள் கொடியைத் தான் உணர்ச்சி மேலீட்டோடு தழுவிவந்ததை மகிழ்ச்சியுடன் எடுத்துரைக்கிறாள். இக்கருத்தை,

அம்மவாழி தோழி! அன்னைக்கு
உயர்நிலை உலகமும் சிறிதாதல், அவர்மலை
மாலைப்பெய்த மணங்கமழ் உந்தியொடு
காலை வந்த காந்தள் முழுமுதல்
மெல்லிலை குழைய முயங்கலும்
இல்உய்த்து நடுதலும் கடயா தோளே. (குறுந். 361)

என்பது பாடலாகும். இப்பாடலில் தலைவி தலைவன் நாட்டிலுருந்து வந்த காந்தள் கொடியை மகிழ்ச்சியோடு தான் அதைத் தழுவிவந்து நட்டேன். ஆனால், உறுதியாக நம் தலைவன் விரைவில் வருவார் அவருக்காக ஆற்றியிருப்போம் என்ற உளத்தியல் நோக்குடன் உணர்ச்சி ஊக்கத்துடனும் கூறுவதாக அமைந்துள்ளது.

மற்றுமொரு பாடலில் தோழி, தலைவன் நம்மைப் பிரிந்து சென்றுள்ளான். ஆனால், அவன் வருகையினால் பிரிவுத் துன்பம் நமக்கு இரட்டிப்பான மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று தலைவி குறிப்பிடுகின்றாள். இதை விளக்குமிடத்து,

கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறிஅருந்து
குரங்கு ஒருங்கு இருக்கும் பெருங்கல் நாடன்
இனியன் ஆகலின் இனத்தின் இயன்ற
இன்னா மையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடோ! (குறுந். 288)

என்ற பாடல் விளக்குகிறது.

**தலைவி, தலைவனுக்காக வரைவிடை வைப்பக் காத்திருத்தலைக் கூறுதல்**

தலைவனின் வரைவிடை வைத்துப் பிரிந்து செல்கின்றான். அவன் வருகைக்காகத் தலைவி காத்திருத்தலைக் கூறுவன மூன்று பாடல்கள். தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள காலம் தாழ்த்துகிறான். இந்தக் காலங்களில் தலைவி ஆற்றியிருக்கிறாள். உளத்தியளின் அடிப்படைகளில் ஒன்றாக இயல்பு ஊக்கம் என்று கூறுவர். தலைவி இவ்வியல் ஊக்கத்துடன் தலைவனுக்காகக் காத்திருக்கிறாள். இக்கருத்தை விளக்குமிடத்து,

யாரும் இல்லை தானே கள்வன்
தான்அது பொயப்பின் யான்எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பாரக்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே. (குறுந். 25)

என்னும் அமைகின்றது. தலைவன் என்னைக் களவில் மணம் செய்து சூளுரைத்த போது ஆரல் மீனுக்காகக் காத்திருக்கும் குருகு மட்டும் இருந்தது. அவன் அதை மறுத்துரைத்தால் என்னால் என்ன செய்யமுடியும் என்று உளத்தியல் நுட்பத்துடன் எடுத்துரைக்கிறாள்.

மற்றொரு பாடல், பின்வருமாறு இடம்பெறுகின்றது. அவை,

கான மஞ்ஞை அறைஈன் முட்டை
வெயில்ஆடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை...... (குறுந். 38)

என்பது பாடல். இப்பாடலில் தலைவனுடைய மலையிலுள்ள காட்டில் திரியும் மயில் பாறையின்மீது முட்டைகளை ஈன்றுவிட்டுச் செல்லும். அந்த முட்டைகளைக் கருங்குரங்குகள் உருட்டி விளையாடும். அத்தகைய காட்சி என்னைப் போன்றவர்க்கு அது நற்செயல் இல்லை. எனவே, தலைவன் விரைவில் என்னை மணம் செய்துக்கொள்ளதே நல்லது என்று தலைவி உள்ளுணர்வுகள் வெளிப்படுமாறு தன் உளத்தியலோடு தொடர்பு படுத்தும் நுட்பத்துடன் இந்தப் பாடல் அமைந்துள்ளது.

தலைவியின் உளத்தியல் அணுகுமுறைக்குச் சான்றாக அமையும் மற்றொரு பாடல் அமைந்துள்ளது. அவை,

யாம்எம் காமம் தாங்கவும் தாம்தம்
கொழுதகை மையின் அழுதன தோழி!
.............................................. (குறுந். 241)

என்பது பாடல். இப்பாடலில் தலைவி குறிப்பிடும்போது, ஆவின் கன்றுகளை மேய்ப்பதற்காக ஓட்டிச் செல்கின்றனர். அவர்கள் செல்லும் வழியில் மொட்டும் மலரும் மிகுந்திதுக்கும் மரத்தில் ஏறாவில்லை. அம்மலர்கள் கீழை விழுவதற்காக புலி புலி என்று மரத்தின் கீழிருந்தே கூவிஆரவாரம் செய்கின்றனர். அந்த ஒலி விண்ணகத்தே செல்லும் மலை நாட்டின் தலைவனுக்காக தான் காத்திருக்கிறேன் என்கிறாள் தலைவி. ஆனால், தலைவனோடு கொண்ட நட்பினால் என் கண்கள் தாமே அழுதன என்கிறாள். இப்பாடல் தலைவி உளத்தியல் நுட்பத்தை எடுத்துரைப்பதாக உள்ளது எனலாம்.

இன்னுமொரு பாடலில், தலைவி தோழியிடம் தலைவன் நம்மைப் பிரிந்திருக்கின்றான். ஆனால், நான் தலைவன் நாட்டிலுள்ள வளமான குன்றைப் பார்த்தேன். அந்த மலையில் மயிலினங்கள் அகவுகின்றன. அங்கு குரங்கினங்கள் தன் குட்டிகளோடு நடுங்கும் மலைப்பொழிவு மிகுந்த குன்றினைப் பார்த்தேன். தோழி அதனால் என் நெற்றி பொன்னிற ஒளியுடையதாக மாற்றம் பெற்றுள்ளதா என்று பார்த்துச்சொல் என தலைவி கேட்கிறாள். இப்பாடல் வழி தலைவி தோழியிடம் எடுத்துரைக்கும் உளத்தியல் அணுகுமுறை சிறப்பிடம் பெறுகிறது.

தலைவன் வரைவு நீட்டித்த விடத்துக் குறிப்பிடுவதாகப் பின்வருமாறு அமையும் பாடல்.

...................
கல்லினும் வலியன் தோழி!
வலியன் என்னாது மெலியும்என் நெஞ்சே! (குறுந். 187)

இப்பாடல் தலைவியை ஆற்றுவிப்பதற்காகத் தலைவனைத் தோழி பழித்துப்பேசுகிறாள். அதற்குப் பதிலுரையாகக் குறிப்பிடும் தலைவி, அவன் கல்லினும் வலிமையுடையவன். அதைப் புரிந்துகொள்ளாத என் உள்ளம் வருந்துகிறது. ஆகையால், தலைவன் எவ்வகையிலும்

குற்றமற்றவன் எனவே என்னைத் திருமணம் செய்துக்கொள்வான் என்று நுட்பமாக எடுத்துரைக்கிறாள்.

**தலைவன் இரவில் வருவதால் துன்பம் ஏற்படும் என வருந்துதல்.**

தலைவன் தலைவியுடன் களவின்பத்தை அனுபவிப்பதில் நாட்டம் உடையவனாக இருக்கிறான். அதனால், அவன் இரவுக்குறியில் வருகிறான். அவ்வாறு வரும்போது துன்பம் ஏற்படும் எனவருந்துகிறாள். இக்கருத்தை உணர்த்தும் பாடலில் தலைவி குன்றிலுள்ள கோட்டான் சத்தமிட்டாலும், தன் வீட்டின் முற்றத்திலுள்ள பலா மரத்தின் பழத்திற்காக ஆண்குரங்கு ஒரு மரம்விட்டு மற்றொரு மரத்திற்குத் தாவினாலும் அவ்வொலியைக்கேட்டு மனம் அஞ்சுவதாகத் தோழியிடம் கூறுகிறாள். அவர் வரும் இருள் சூழ்ந்த வழியிலே அவருடன் என் நெஞ்சும் செல்கிறது என்றுரைக்கிறாள். தலைவி அவனோடு ஒன்றிப்போன உளத்தியல் சிக்கலைச் சுட்டிக்காட்டடுவதாகப் புலவர் பாடலைப் புனைந்துள்ளார். இக்கருத்தை விவரிக்கும்,

> ………………………… .
> என் நெஞ்சம் இனியே
> ஆரிருட் கங்குல் அவர்வரின்
> சாரல் நீள்இடைச் செலவுஆ னாதே. (குறுந். 153)

என்பது பாடலாகும்.

**தலைவன் செய்த தவறுக்கு என தோள் மெலிவுற்றது என்று கூறுதல்.**

தலைவன் தலைவியை விட்டுப் பிரியேன் என்று கூறுகிறான். அவ்வாறு பிரிய நேர்ந்தாலும் விரைவில் திரும்பி வருவேன் என்று செல்கிறான். அவன் குறிப்பிட்டுச் சென்ற காலத்தில் அவனால் வரமுடியவில்லை. இதனால் தலைவியின் தோள் மெலிவுற்றது. மலைநாடனும் தான் திரும்புவதற்குரிய அடையாளமானக் குறியும் தவறிப்போனது. அதனால் தலைவி என் அகன்ற தோள்களும் பசப்புற்றன. தலைவன் குறித்துச் சென்ற காலம்கடந்த பிறகு அவன் வந்துள்ளதாகத் தோழி தலைவியிடம் கூறுகின்றாள். அக்கருத்தைத் தலைவி நீ கூறுவது உண்மைதானா எனும் பொருளில் வினவுவதாகப் பாடல் அமைந்துள்ளது. இக்கருத்தைப் பின்வருமாறு கவிஞர் படைத்துள்ளார். இதை,

> ……………………..
> தான் குறி வாயாத் தப்பற்குத்
> தாம்பசந் தனஎன் தடமென் தோளே. (குறுந். 121)

என்று முடியும் பாடல் எடுத்துரைக்கிறது. தலைவி இப்பாடலில் உளத்தியல் நயத்துடன் மிகவும் நுட்பத்துடன் விவரிப்பதாக உள்ளது.

### தலைவியின், தன் மனவலிமையை வெளிப்படுதல்

தோழி, தலைவன் நம்மீது கொண்ட நட்பினால், குறித்தக்காலத்தில் வராததால் நமக்குப் பசலை நோய் உண்டானது. அந்தப் பசலை நோய் நம்மைத் துன்புறுத்தினாலும், அது நம் உள்ளத்தின் மன உறுதி சிறிதளவும் தளராது என்று தலைவி, தோழியிடம் கூறுகின்றாள். இந்த மனவலிமைக்குக் காரணம் தலைவன் நம்மீது கொண்ட நட்பினால் நமக்கு உண்டானதே உள்ளத்து உண்டாயிக்கும் மன உறுதியே என்றுரைக்கிறாள். இங்கு,

.............................. நம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பயந்தக் காலும் பயப்பு ஒல்லாதே. (குறுந். 264)

பாடல் வரிகள் விளக்கியுரைக்கிறது.

### தலைவியின் கண்கள் பசலைப் படர்ந்தைக் கூறுதல்

தலைவன் பொருள்தேடவதற்காகப் பிரிந்துச் செல்கின்றான். அந்தப் பிரிவுக்கு முன்னர் தலைவியின் கண்கள் குவளைமலர்கள் போன்றிருந்தன என்கிறார் ஆசிரியர். பின்னர் அவை முழுவதும் பசலை நிறம் அடைந்துள்ளது என்கிறாள். தலைவனைக் காணாத்தால் கண்கள் பசலைப்படர்ந்தது எனும் உளத்தியல் திறத்தை இங்கு கபிலர் தலைவி கூற்றின்வழி விளக்கியுரைக்கிறார். இதை,

............
நோய்தந் தனனே தோழி!
பசலை ஆர்ந்தன குவளைஅம் கண்ணே! (குறுந். 13)

என்று முடியும் பாடல் விளக்குகிறது.

### தலைவனின் தூதுவன் கேட்க தலைவி தோழியிடம் உரைத்தல்

தோழி, தலைவனின் குற்றமற்ற உள்ளத்தைக் காட்டும் செய்தி நம்மிடம் வந்துள்ளது என்றுரைக்கிறாள். அவர் அனுப்பிய தூதுவனிடம் நற்செய்தியை அனுப்புவோம் என்கிறாள். இவன் நாம் தலைவனிடம் தூதுவனிடம், அவனிடம் நாம் போற்றுகின்ற உண்மையான நட்பினை எடுத்துரைப்பான் என்று கூறுகிறாள். இதை,

............................ நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு
தான்மணந் தனையம் என விடுகம் தூதே. (குறுந். 106)

என்ற பாடல்வரிகள் விளக்குகிறது.

### நொதுமலர் வரைவின்போது தலைவி உரைத்தல்

தலைவன் தலைவியின் களவு வாழ்க்கையை ஊரார் அறியாதவாறு உள்ளது. அதனால், ஊர்மக்கள் புதியர்களிடம் மணம் பேசகின்றனர். இதை, அறிந்த தலைவி, இவ்வூரார் மனம் புழுங்கும் இயல்பினர் என்று குறிப்பிடுகின்றாள். தலைவன் முதல்நாள் காட்டிய அதே அன்புடன் இன்றும் பழகிவரும் குணத்தினன். அவன் நட்பிற்கு இலக்கணமாக விளங்குபவன். இதைப் புரிந்துக்கொள்ளாத ஊராரின் பேச்சிலிருந்து விடுதலைப்பெற விரும்புகிறாள். ஆதலால், தாம் விரும்பும் காதலனைத் திருமணம் செய்துக்கொள்ள தோழியை அறத்தோடு நிற்க வேண்டுகிறாள். இதை விளக்கும்,

........................
பெருவரை அடுக்கத்துக் கிழவன் என்றும்
அன்றை அன்ன நட்பினன்
புதுவோர்த்து அம்மஇவ் அழுங்கல் ஊரே. (குறுந். 385)

என்ற பாடலாகும். களவு மணம் கற்புமணமாவதற்குரியச் சூழலை விவரிக்கும் தலைவியின் உளத்தியல் அணுகுமுறை இவண் குறிப்பிடத்தக்கது.

### தலைவி தலைவனோடு மனம் ஒன்றாத காரணத்தைக் கூறுதல்

தோழி, தலைவனிடம் நான் மனம் பொருந்தாதவள் இல்லை. நான் அவனிடம் என்றும் ஒற்றுமைப்படுவேன். ஆனால், தலைவனின் மலைநாட்டில் புலியுடன் போரிடும் யானைக்குக் கோபம் மிகுந்ததனால் வேங்கை மரத்தின் அடிமரத்தைத் நெரித்து மிதித்தது. கீழேசாய்ந்த அந்த மரத்தின் மலரைக் குறவரின பெண்கள் மரத்தின் மேலேராமல் கீழிருந்தே பரித்துத் தங்கள் கூந்தலில் சூடிக்கொள்கின்றனர். அத்தகைய மலைநாட்டின் தலைவன் மேல் இக்காரத்தினால் மட்டுமே சினம் அடைகிறேன் என்கிறாள். தலைவி இப்பாடலில் உள்ளுறை உவமத்தால் உணர்த்துவதாக அமைந்துள்ளது. இங்கு, வேங்கை மரமாகத் தலைவியும் உருவகிக்கப்படுத்தப்படுகிறது. தலைவனை யானைக்கு உதாரணமாக ஒப்பிட்டு ஆசிரியர் பாடலை அமைத்து உளத்தியல் நுட்பம் வெளிப்படுமாற்றை விளக்கியுரைக்கிறார். இதை,

ஒன்றேன் அல்லன்; ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரும் நாடனொடு
ஒன்றேன் தோழி! ஒன்றி னானே. (குறுந். 208)

என்று பாடல் விவரிக்கிறது. இப்பாடலில் தலைவனும் தலைவி குற்றமற்றவள். அவள் தவறே செய்யவில்லை. தலைவியைக் காதலித்துக் காமநோயினால் வேங்கை மரத்தைப்போல் காரணமில்லாமல் சாய்த்துவிட்டான். அதனால் நான் மெலிவடைந்துவிட்டேன் என்று தலைவி கூறுகின்றாள். தலைவன் மீது இந்த ஒரே காரணத்தால் மட்டுமே மனம் ஒன்றாததற்குக் காரணம் என்று கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது.

### தோழி கூற்றில் வெளிப்படும் உளத்தியல் அணுகுமுறை

தலைவன் தலைவியின் அகத்திணை ஒழுக்கம் இன்றளவும் போற்றப்படுவதற்குத் தோழியின் பங்கு மட்டற்றது. தோழி, இவ்விருவரின் காதல் ஒழுகலாறுகள் களவில் தொடங்கி கற்பில் முடியும் வரைக்கும் உற்றத் துணையுடன் செயலாற்றுகிறாள். தலைவிக்கு நூற்றுக்கு நூறு சதவிகிதம் நம்பிக்கைக்கு உரியவளாகத் திகழ்பவள். தலைவன் தலைவியின் காதல் வாழ்வு அன்பினால் உறுதிப்படுத்தப்படுவதற்குப் பாலமாக விளங்குபவள். தலைவிக்குத் தனக்குக் காதல் வாழ்வில் சிக்கல் ஏற்படும் சூழலில் உளத்தியல் அணுகுமுறையுடன் அதைச் சரி செய்பவள். அவ்வணுகு முறையை மிகவும் நுட்பமாகக் கையாளுபவள். இருவருக்கும் எந்தவகையிலும் இடையூறு நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளும் பண்ணினள். இவளின் உளத்தியல் நுட்பத்தைக் கபிலர், தம் படைப்பாளுமையில் ஏழுபாடல்களின் வழி தோழி கூற்றாகப் பாடியுள்ளார்.

### இரவுக்குறியிடத்து தலைவனுக்கு தோழி கூறுதல்

ஓங்கி உயர்ந்த மலைக்குரிய தலைவனே, மழைமிகுதியாகப் பெயத்ததால் உன்னால் ஆகாயத்தைப் பார்க்கமுடியாது. நீ கடந்து வந்த வழிமுழுவதும் மழைநீரால் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுவதால் பூமியைக் காண இயலாது. சூரியனின் ஒளிமறைந்ததனால் இருள்மிகுதியாக சூழ்ப்பட்டுள்ளது. இவ்வாறு இயற்கை சீற்றம் மிகுந்துள்ள காலத்தில் எப்படி வந்தாய். இங்குள்ள அனைவரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கின்றனர். இரவுக்குறிக்காக எங்களை எங்ஙனம் தேடிவந்தாய் என்று தோழி குறிப்பிடுகிறாள். எம் சிற்றூரில் வேங்கைமணம் கமழும் இவ்விடத்தில் எவ்வாறு அறிந்தாய். இந்த நிலையில் நீ வந்திருப்பதைப் பார்த்து மனம் நோகின்றது என்கிறாள். இப்பாடலில் தலைவன் நலனில் மிகுந்த அக்கறை உள்ளவளாய் செயல்படுகிறாள். தோழி இக்கருத்தை வெளிப்படுத்தும் பாங்கு உளத்தியல் அணுகுமுறையுடன் விளக்கியுரைக்கிறாள். இவ்வுளவியல் பாங்கினை விளக்குமாறு,

பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே
நீர்பர்ந்து ஒழுகலின் நிலங்கா ணலையே
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ, ஓங்கல் வெற்ப!
வேங்கை கமழும்எம் சிறுகுடி
யாங்குஅறிந் தனையோ? நோகோ யானே. (குறுந். 355)

என்னும் பாடல் இடம்பெறுகின்றது.

மற்றொரு பாடலில், தலைவன் தோழியிடம் இரவுக்குறி வேண்டுகிறான். அவள் அதற்கு உடன்படுவள் போல் மறுத்துரைக்கும் உளத்தியல் நுட்பத்துடன் கூடிய அணுகுமுறையை விளக்கிறது. இதைக் குறிப்பிடுமிடத்து,

காமம் ஒழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென , அருவி

விடரகத்து இயம்பும் நாட! எம்
தொடர்பும் தேயுமோ நின்வயி னானே. (குறுந். 42)

இப்பாடல் அமைகின்றது. இங்கு மலைமுழஞ்சுகளில் தொடர்ந்து அருவியின் ஒலிமிக்க நாட்டின் தலைவனே! தலைவிக்கு உன்னிடம் சேர்ந்து காம இன்பத்தை அனுபவிக்க முடியாமல் போகலாம். ஆனால், உன்மீது எமக்கு உள்ள நட்பு இதனால் குறைந்துபோகாது. ஆதலால், தலைவனிடம் இரவுக்குறியில் தலைவியைக் கூடுவதைத் தவிர்கக்ச் சொல்கின்றாள். இந்த உளத்தியல் அணுகுமுறையின் வழி தலைவியை விரைவில் ஊர்மக்கள் அறியுமாறு நீயும் தலைவியும் திருமணம் செய்துக்கொள்ளுங்கள் என்று தோழி எடுத்துரைக்கிறாள்.

**தலைவன் கேட்குமாறு தோழி, தலைவியிடம் கூறுதல்**

தலைவி, வெற்பன் உன்னைக் கூடி மகிழ்வதற்கு முன்பு உன் தோள்கள் வலிமையுடன் இருந்தது. இப்போதோ உனது மூங்கிலைப் போன்ற திரண்ட அழகுடைய தோள்களின் நெகிழ்ச்சியடைந்து மெல்லியவைகளாக மாற்றம் அடைந்துள்ளன. இவை நல்ல அழகிய தோள்கள் என்னும் பெயரை இழந்துவிட்டன. இப்போது வெறுப்புறும் துன்பத்தில் உழன்றுக் கொண்டிருக்கிறாய். அதனால் நீ உறக்கமின்றி துன்புகின்றாய். அத்துடன் உன்னுடைய மையுண்ட கண்களில் நீர் பெருக்கெடுத்துவருவதால் முந்தைய அழகை இழந்துவிட்டாள் என்று தோழி உளத்தியல் பாங்குடன் தலைவன் கேட்குமாறு எடுத்துரைக்கிறாள். இந்த உளத்தியல் அணுகுமுறையை விளக்குவதாக,

முனிபடர் உழந்த பாடுஇல் உண்கண்
பனிகால் போழ்ந்து – பணைஎழுல் ஞெகிழ் தோள்
மெல்லிய வாகலின் மேவரத் திரண்டு
நல்ல என்னும் சொல்லை மன்னிய!
......................... . (குறுந். 357)

என்னும் பாடல் விவரிக்கின்றது.

மற்றொரு பாடலில் மலையமான் திருமுடிக்காரியின் முள்ளூர்க் காட்டின் சந்தனம் மணக்கும் மார்பினையுடைய தலைவன், நீ இவ்விடத்தில் எம்மைச் சந்திக்க வரவேண்டாம். எம்முடைய தாய் இங்கு அடிக்கடி வருவாள். எனவே, திணைப்புனம் காக்குமிடத்துக்குச் செல்கிறோம். ஆகையால், அங்கு வந்து எங்களைக் காண்பது எளிது என்று தோழி நயம்பட தலைவனிடம் உரைக்கிறாள். இவ்வுளவியல் நுட்பம் நீ தலைவியை விரைவில் மணம் செய்துகொள்ள வேண்டும் என்பதைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இக்கருத்தை,

...............
எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்து
ஆரம் நாறும் மார்பினை
வாரற்க தில்ல வருகுவள் யாயே. (குறுந். 198)

என்ற பாடல் விளக்குகிறது.

**தலைவியை விரைவில் மணந்துகொள் என்று கூறுதல்**

தலைவன் களவு இன்பத்திலேயே காலத்தைக் கடத்துகிறான். இதை மிகவும் உளத்தியல் நுட்பம் வெளிப்படுமாறு உவமைநயத்துடன் தோழி எடுத்துரைக்கும் விதமாக அமைந்துள்ளது. இந்த உளத்தியல் அணுகுமுறையை விரித்துரைக்கும்,

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார்அஃது அறிந்திசி னோரே, சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்குஇவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே. (குறுந். 18)

என்ற பாடல் இடம்பெறுகின்றது. இப்பாடலில் தலைவனே, தலைவி உன்மீது வைத்துத்துள்ள காதல் மிகவும் அதிகம். எனவே, அவளை விரைவில் திருமணம் செய்துக்கொள் என்றுரைக்கிறாள். அவ்வாறு நீ அவளை மணம் செய்யாவிட்டால், அவளுடைய உயிருக்கு என்ன நடக்குமோ தெரியாது என்று குறிப்பிடுகின்றாள். இக்கருத்தை விளக்குமிடத்துச் சிறந்த உவமையை ஆசிரியர் கையாண்டுள்ளார். பக்க மலையில் பலாமரத்தின் வலிமையில்லாத கிளையில் பெரியபலா பழுத்துத் தொங்கிக் கொண்டிருப்பதைப் போல் அவள் உன்மீது கொண்ட காமமிகுதியால் உன்னையே நினைத்துக் கொண்டுள்ளாள். எனவே, நீ, தலைவியை விரைவில் திருமணம் செய்துக்கொள் என்று தோழி வரைவுக்கு வற்புறுத்துகிறாள்.

மற்றொரு பாடலில் (குறுந். 225)

தோழி, தலைவனிடம் உனக்கு நாங்கள் களவுகாலத்தில் செய்த நன்றியை மறந்துவிடாதே என்று கூறுகிறாள். அவ்வாறு நீ மறப்பாயானால் வளம் குன்றிய காலத்தில் அரசனுக்கு உதவியவர்களை, அவன் செல்வ வளம் பெற்றபோது உதவியர்களை மறந்துவிடுபவனைப்போல் நீ இருக்கவேண்டாம் என்னும் பாடலும் இடம்பெறுகின்றது.

**உடன்போக்கு செல்லும் தலைவனுக்கு தோழி கூறுதல்**

தலைவியைத் தோழி, உடன்போக்கிற்கு உடன்படவைக்கிறாள். அதன் பின்னர் அவளுடன் செல்ல எதிர்படும் தலைவனிடம் தோழி உளத்தியல் நோக்குடன் எடுத்துரைக்கிறாள். அவ்வாறு குறிப்பிடும்போது, நமக்குப் பெரிதான நன்மையை ஒருவர் செய்தால் அதை இவ்வுலகத்தார் மறக்கமாட்டார்கள். அவ்வாறு காலத்தால் செய்த நன்றி மிகவும் முக்கியமானது. தனக்கு உதவிசெய்தவரையே போற்றிவாழ்வர். இவள் உன்னோடு வாழத்துணிந்து உன்னுடன் வருகிறாள். பிற்காலத்தில் இவள் சிறிதான உதவியே செய்பவளாக இருந்தாலும், நீ வெறுப்பின்றி அவளைப் போற்றி பாதுகாப்பாயாக என்று தோழி குறிப்பிடுகிறாள். ஏனெனில், அவள் உன்னையே பற்றுக்கோடாக நினைத்து வருகிறாள். இக்கருத்தை எடுத்துரைக்கும்,

....................................... .
நன்மலை நாட! நின் அலது இலளே. (குறுந். 115)

என்று முற்றுப்பெறும் பாடல் அமைகின்றது.

**முடிவுரை**

இதுகாறும் கண்டவற்றுள் சங்க இலக்கியம் பண்டையத் தமிழரின் வாழ்க்கையை எடுத்துரைக்கும் கருத்துக் கருவூலம். இவற்றில் ஒன்றான குறுந்தொகைப் பாடல்களில் குறிஞ்சிக் கபிலரின் இருபத்தெட்டுப் பாடல்களையும் உளத்தியல் அணுகுமுறையில் ஆராயப்பட்டன. முதற்கண் இக்கட்டுரைக்கு அணிசேர்க்கும் விதமாக உளவியலுக்கான மேனாட்டு அறிஞர்களின் விளக்கங்கள் குறிப்பிடப்பட்டன. அத்துடன் உளவியலுக்கு அடிப்படைக் காரணங்களையும் விளக்கப்பட்டன. இன்றைய காலங்களில் உளத்தியல் அணுகுமுறையின் தேவையையும் விளக்கப்பட்டது. குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் பாடல்கள் இன்றைய சமுகத்திற்குப் பொறுந்தும் வகையில் அமையும் எனலாம். தலைவன் கூற்றாக அமையும் பாடல்களில் உளத்தியல் நுட்பம் பயின்றுவந்துள்ள பாங்கினையும் எடுத்துரைக்கப்பட்டது. கபிலர் தலைவன் கூற்றாகக் கூறுமிடத்து அந்தமாந்தராகவே நினைத்துக்கொண்டு உள்ளுணர்வுகளை விளக்கியுரைக்கும் பான்மையும் இடம்பெறுகின்றது. அதேபோல் தலைவி கூற்றாக உள்ளப்பாடல்களிலும் பெண்களின் அகவுணர்வுகளையும் சுட்டிக்காட்டியுரைக்கும் உளத்தியல் நோக்கும் விளக்கப்பட்டுள்ளது. அகத்திணை வாழ்க்கையின் அடிப்படைக் காரணி என்றும் உயிரின் மூச்சு எனவும் அழைக்கும் சிறப்பிற்குரிய அகமாந்தர் தோழி. இந்தத் தோழி கூற்றாகப் புலவர் எடுத்துரைக்கும் உளத்தியல் நுட்பத்தை வெளிப்படும் திறம்மிக்கவையாகக் கபிலர் பாடல்களைப் படைத்துள்ளார். எனவே, குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறை என்னும் ஆய்வுக்கட்டுரை இன்றைய தலைமுறையினரின் ஆராய்ச்சிக்கும் பயனுள்ளதாக அமையும் எனலாம்.

**துணைநூற்பட்டியல்**

பாலுசாமி, நா. (ப. ஆ) வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-5, ப. 444.

ஶ்ரீநிவாசன், பயன்தரும் மனோதத்துவம், ப. 6.

சுப்பிரமணியன், (தொ. ஆ.) க்ரியாவின் தற்கால தமிழகராதி, ப. 156.

தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப. 123.

மருதநாயகம், ப. சங்க இலக்கிய ஆய்வு தெ. பொ. மீயும் மேல அறிஞரும், ப. 108.